Registered as a News Paper பக்கங்கள்: 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 08 (24 - 08 - 1991) சனிக்கிழமை ஓசை: 187

## முல்லைச் செயலகத்தில் ஊழியர்கள் பற்றாக்குறை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் பணிமனையில் பெரும் ஊழியர்கள் பற்றாக் குறை நிலவுகின்றது. அலுவலகத்தில் பணியாற்றும் ஒருசில ஊழியர்களும் வெளிப் புறக்கடமைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளதால் அலுவலகம் வெறிச்சோடிப்போயுள் ளதாக தெரியவருகிறது. கொழும்பிலிருந்து வண்டித்தொட (4ஆம் பக்கம் பார்க்க)

# பண்ணை இறங்குதுறை மீது நேற்று விமானக் குண்டு வீச்சு

## ஒருவர்பலி; 6பேர்காயம்; உடைமைகள்சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர்ப்பகுதியையும், தீவகத்தையும் இணைக்கும் பண்ணை வீதியில் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நேற்று குண்டு வீச்சு நடத்தின. நீண்ட நாட்களுக்குப் பின் யாழ். நகருக்கு அண் மையாக நடந்த இக்குண்டு வீச்சுத் தாக்குதலின் போது ஒருவர் கொல்லப்பட்டார். 6 பேர் காயமடைந்தனர் வாகனங்களும பொருள் களும் சேதமடைந்தன.

நேற்று பிற்பகல் 2.00 மணி யளவில் இரண்டு சிறிலங்கா விமானப்படை குண்டு வீச்சு விமானங்கள் பண்ணை வீதி யூடாகச் சென்றுகொண்டிரு ந்த பிரயாணிகள் மீதும், கடலில் சென்று கொண்டி ருந்த பயணிகள் மீதும் தாக் குதலை மேற்கொண்டன. இத் தாக்குதல் பண்ணை வீதியில் உள்ள தீவுப்பகுதிப்பக்க இற ங்கு துறை மீது நடாத்தப் பட்டது

இக்குண்டுத் தாக்குதலில் இ. சுமதி (வயது 18), இவரது தங்கை இ. கமிலா (வயது 4), ரி. சாந்தினி (வயது 26), எம். எட்வேட் வயது 80), யாழினி (வயது 13) ஆகி யோர் காயமடைந்தனர். குண்டுத்தாக்குதலுக்கு அஞ்சி தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகக் கடலில் பாய்ந்த நபர் ஒருவர் நீரில் (4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைக் கட்டுப்படுத்தும் இந்திய - பிரிட்டன் ஒப்பந்தம்?

(சென்னை)

லண்டனில் உள்ள விடுத லைப் புலிகள் உட்பட மற்றும் தீவிரவாதிகளின் நடவடிக்கை களைக் கட்டுப்படுத்தவும், சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் வகையிலும் ஒப்பந் தம் ஒன்றை பிரித்தானியா வும், இந்தியாவும் செய்து கொள்ளவிருப்பதாக இந்திய வானொலி நேற்று மாலை அறிவித்தது.

விடுதலைப் புலிகள் மற்றும் கலிஸ்தான் தீவிரவாதிகளுக்கு எதிரான முக்கிய நடவடிக் கையாக இந்தியாவுக்கும், பிரித்தானியாவுக்கும் இடை யிலான இந்த இரு தரப்பு ஒப் பந்தம் அமையும் என்று தெரி விக்கப்படுகிறது. மேலும் இந்த ஒப்பந்தத்தின்படி லண்டனில் உள்ள தீவிரவாதிகளின் சொத் துக்கள் பறிமுதல் செய்யப் படும். அவர்களின் வங்கிக் கணக்குகளும் ஆய்வு செய்யப் படும். தீவிரவாதிகள் போதை வஸ்து கடத்துவதும் மிகவும் கண்டிப்பாகக் கட்டுப்படுத்தப்

### புதுக்குடியிருப்பு

## அகதி முகாமில் தீ விபத்து; உடைமைகள் நாசம்

### மட்டு. மாவட்டத்தில்

## இரு விடுதலைப் புலிகளும் 3 ஆதரவாளரும் வீரமரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தி லுள்ள மன்ரேசா என்னுமிட த்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை ஆறு மணி யளவில் சிறிலங்கா இராணு வத்தினருடனான மோதலில் வீரவேங்கை சுசியன் சுப்பிர மணியன் செல்வக்குமார், சின்ன ஊறணி) என்பவரும் (4ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் பள்ளத்தில் வீழ்ந்து 14 பேர் காயம்

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்றிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று திடீரென்று 25 அடி ஆழமான பள்ளத்தில் பாய்ந்ததால் 14 பேர் படுகாயமுற்றனர்.

இச்சம்பவம் 17ஆம் கட்டை இராணுவ முகாமிற்கு சமீப மாக இடம் பெற்றதாக தக வல்கள்கூறுகின்றன. காயமுற் றவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமான தாக இருப்பதாகவும் செய்தி கள் கூறுகின்றன.

## பற்றறிகள் கடத்துவோர் கைது

(கொழும்பு)

பற்றறிகளை கடத்திச் செல் வோர் தாண்டிக்குளம்

## வீரவணக்கம்

### கரிகாலன் கம்பன்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின ருடன் 15-07-91 அன்று ஏற் பட்ட நேரடி மோதலில் விடு தலைப்புலிகளைச் சேர்ந்த கரிகாலன் (மாப்பாணர் உதய குமார் புத்தூர்) என்பவரும் கேணிப்பகுதியில் நடைபெற்ற உக்கிர மோதலில் கம்பன் (கனகராஜா, சத்தியகுமார், காஞ்சிபுரம் மாதகல்) என்ப வரும் வீரமரணத்தை தழுவிக் கொண்டுள்ளனர் இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## இராணுவ நடமாட்டம் வவுனியாவில் அதிகரிப்பு

(வவுனியா)

வவுனியா நகர்ப் பகுதியில் வழமையை விட இராணுவத் தினரின் நடமாட்டம் அதி கரித்திருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது

சில தினங்களாக நகர்ப்புற இராணுவ முகாம்களில் ஏரா ளமான படையினர் குவிக்கப் பட்டு வருகின்றனர் என்றும் தெரியவருகின்றது.

சில வார இடைவெளிக்குப் பின்னர் வவுனியா மாவட்டத் தில் இராணுவத் தாக்குதல் நடவடிக்கை ஒன்றை மேற் கொள்வதற்கு திட்டமிடப் படுவதாகவும் கூறப்படுகின் றது. (தி)

## வவுனியா நகர்ப் பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி

(வவுனியா)

யாழ் - வவுனியா வீதிவழி யாக வவுனியா நகரப்பகுதி நோக்கிச் செல்லும் பயணி கள் சிறிலங்கா இராணுவத் தினரால் மட்டுப்படுத்தப் பட்ட அளவிலேயே அனும திக்கப்படுகின்றனர்,

சில தினங்களாக குறைந்த அளவிலான பயணிகளே வவு னியா நகரப்பகுதியை நோக்கி பயணம் செய்ய இராணுவத் தினரால் அனுமதி வழங்கப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பாராளு. தெரிவுக் குழுவில் 43 பேர் அங்கத்துவம்

குமார் புத்தூர்) என்பவரும் கேணிப்பகுதியில் நடைபெற்ற உக்கிர மோதலில் கம்பன் (கனகராஜா, சத்தியகுமார், காஞ்சிபுரம் மாதகல்) என்பவரும் வீரமரணத்தை தழுவிக் கொண்டுள்ளனர் இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ஒருவர்பலி; 6பேர்காயம்; உடைமைகள்சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர்ப்பகுதியையும், தீவகத்தையும் இணைக்கும் பண்ணை வீதியில் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நேற்று குண்டு வீச்சு நடத்தின. நீண்ட நாட்களுக்குப் பின் யாழ். நகருக்கு அண்மையாக நடந்த இக் குண்டு வீச்சுத் தாக்குதலின் போது ஒருவர் கொல்லப்பட்டார். 6 பேர் காயமடைந்தனர் வாகனங்களும பொருள்களு'ம் சேதமடைந்தன.

நேற்று பிற்பகல் 2.00 மணியளவில் இரண்டு சிறிலங்கா விமானப்படை குண்டு வீச்சு விமானங்கள் பண்ணை வீதியூடாகச் சென்றுகொண்டிருந்த 'பிரயாணிகள் மீதும், கடலில் சென்று கொண்டிருந்த பயணிகள் மீதும் தாக்குதலை மேற்கொண்டன. இத் தாக்குதல் பண்ணை வீதியில் உள்ள தீவுப்பகுதிப்பக்க இறங்கு துறை மீது நடாத்தப் பட்டது

இக்குண்டுத் தாக்குதலில் இ. சுமதி (வயது 18), இவரது தங்கை இ. கமிலா (வயது 4, ரி. சாந்தினி (வயது 26), எம். எட்வேட் வயது 30), யாழினி (வயது 13) ஆகியோர் காயமடைந்தனர். குண்டுத்தாக்குதலுக்கு அஞ்சி தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகக் கடலில் பாய்ந்த நபர் ஒருவர் நீரில்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைக் கட்டுப்படுத்தும் இந்திய - பிரிட்டன் ஒப்பந்தம்?

(சென்னை)

லண்டனில் உள்ள விடுதலைப் புலிகள் உட்பட மற்றும் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும், சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் வகையிலும் ஒப்பந்தம் ஒன்றை பிரித்தானியாவும், இந்தியாவும் செய்து கொள்ளவிருப்பதாக இந்திய வானொலி நேற்று மாலை அறிவித்தது.

விடுதலைப் புலிகள் மற்றும் கலிஸ்தான் தீவிரவாதிகளுக்கு எதிரான முக்கிய நடவடிக்கையாக இந்தியாவுக்கும், பிரித்தானியாவுக்கும் இடையிலான இந்த இரு தரப்பு ஒப்பந்தம் அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது. மேலும் இந்த ஒப்பந்தத்தின்படி லண்டனில் உள்ள தீவிரவாதிகளின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும். அவர்களின் வங்கிக் கணக்குகளும் ஆய்வு செய்யப்படும். தீவிரவாதிகள் போதைவஸ்து கடத்துவதும் மிகவும் கண்டிப்பாகக் கட்டுப்படுத்தப்படும்.

சென்னையில் நேற்றுச் செய்தியாளரிடம் பேசிய இந்தியாவுக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் டேவிற் இதனைத் தெரிவித்தார்.

இந்த வகையில் அமையும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

புதுக்குடியிருப்பு

## அகதி முகாமில் தீ விபத்து; உடைமைகள் நாசம்

புதுக்குடியிருப்பிலுள்ள ஆர்.சி. பாடசாலையில் முல்லைத்தீவு பிரதேச மக்களுக்காக அமைக்கப்பட்ட அகதிமுகாமில் புதன் கிழமை காலை பத்து மணியளவில் தீ விபத்தொன்று இடம்பெற்றது. இதனால் இடம்பெயர்ந்தோரின் உணவுப் பொருள்கள் உட்பட உடுபுடவைகள் யாவும் நாசமாகி விட்டன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

மட்டு. மாவட்டத்தில்

## இரு விடுதலைப் புலிகளும் 3 ஆதரவாளரும் வீரமரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மன்ரேசா என்னுமிடத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை ஆறு மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரவேங்கை சுசியன் சுப்பிரமணியன் செல்வக்குமார், சின்ன ஊறணி) என்பவரும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் பள்ளத்தில் வீழ்ந்து 14 பேர் காயம்

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்றிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்று திடீரென்று 25 அடி ஆழமான பள்ளத்தில் பாய்ந்ததால் 14 பேர் படுகாயமுற்றனர்.

இச்சம்பவம் 17ஆம் கட்டை இராணுவ முகாமிற்கு சமீபமாக இடம் பெற்றதாக தகவல்கள் கூறுகின்றன. காயமுற்றவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமானதாக இருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

## இராணுவ நடமாட்டம் வவுனியாவில் அதிகரிப்பு

(வவுனியா)

வவுனியா நகர்ப் பகுதியில் வழமையை விட இராணுவத்தினரின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது

சில தினங்களாக நகர்ப்புற இராணுவ முகாம்களில் ஏராளமான படையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் தெரியவருகின்றது.

சில வார இடைவெளிக்குப் பின்னர் வவுனியா மாவட்டத்தில் இராணுவத் தாக்குதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கு திட்டமிடப்படுவதாகவும் கூறப்படுகின்றது. (தி)

## பற்றறிகள் கடத்துவோர் கைது

(கொழும்பு)

பற்றறிகளை கடத்திச் செல்வோர் தாண்டிக்குளம் சோதனை முகாமில் நாளாந்தம் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டு வருவதாக பாதுகாப்பு படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில், வடபகுதிக்கு தடை செய்யப்பட்ட பொரு

(4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகர்ப் பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி

(வவுனியா)

யாழ் - வவுனியா வீதிவழியாக வவுனியா நகரப்பகுதி நோக்கிச் செல்லும் பயணிகள் சிறிலங்கா இராணுவத்தினரால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அனுமதிக்கப்படுகின்றனர்,

சில தினங்களாக குறைந்த அளவிலான பயணிகளே வவுனியா நகரப்பகுதியை நோக்கி பயணம் செய்ய இராணுவத்தினரால் அனுமதி வழங்கப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாராளு. தெரிவுக் குழுவில் 43 பேர் அங்கத்துவம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வொன்றைக் காணும் பொருட்டு அமைக்கப்படவிருக்கும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் நாற்பத்துமூன்றுபேர் அங்கம் வகிக்கவுள்ளனர்

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ரணில்விக்ரமசிங்க நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த செய்தியாளர்கள் மாநாட்டில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில் இக் குழுவில் எதிர்க்கட்சியைச் சார்ந்த இருபதுபேரும், ஆளும் கட்சியைச் சார்ந்த இருபத்து மூன்றுபேரும் நியமனம் பெறுவர் என்றார்.

பேருவளைப் பகுதியில்

# சிங்கள - முஸ்லிம் கலவரம்; ஒருபெண் குடிசைக்குள் எரிந்துமரணம்

## அகதிகள் நளீமியா பல்கலைக்கழகத்தில் தஞ்சம்

(கொழும்பு)

தெற்கில் பேருவளை பகுதியிலும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் கலவரம் மூண்டது. வீடு ஒன்றினுள் பெண்மணி ஒருவர் எரிந்து சாம்பரானார். மேலும் ஏராளமான வீடுகளும் கடைகளும் எரிக்கப்பட்டுள்ளன. விமானப்படை விமானங்களும் இராணுவமும் ரோந்து புரிகின்றன. ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

புதன்கிழமை அன்று இந்த கலவரத்தினால் சுமார் நானூறு முஸ்லிம்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். முதலில் கோஷ்டிகளுக்கிடையில் இடம்பெற்ற மோதல் பின்பு மிகப்பெரும் கலவரமாக மாறி விட்டதாக கொழும்பு செய்திகள் கூறுகின்றன

கொழும்பு காலி வீதியில் அமைந்துள்ள பேருவளை, சீனன்கோட்டை, மருதானை, தர்காநகர், அளுத்கம ஆகிய பகுதிகளில் இந்தக் கலவரம் இடம்பெற்றுள்ளது.

இப்பகுதிகளில் சிங்கள சமூகத்தைச் சேர்ந்த மக்களும் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த மக்களும் கலந்து வாழ்கின்றனர் ஏற்கெனவே இந்த இரண்டு சமூகத்திற்கும் இடையில் பகைமை உணர்வு இருந்து வந்ததாகவும் கூறப்படுகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இரத்ததான அடையாள அட்டைகளைப் பெறவும்

ஆனையிறவில் காயமடைந்த போராளிகளுக்காக 1991 ஆடி 11 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதிவரை யாழ். போதனா மருத்துவமனையில் இரத்ததானஞ் செய்த அனைவரையும் 1991-08-26 அன்று காலை 9-30 மணிமுதல் மாலை 3-00 மணிவரை பாலம் பணியகத்திற்கு வந்து இரத்ததான அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பாலம் பணியகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## ரவையை உடைக்க முயன்ற இளைஞன் படுகாயம்

யாழ்ப்பாணம்)

துப்பாக்கி ரவையொன்றை கல்லால் குத்தி உடைக்க முயன்ற போது ரவை வெடித்துச் சிதறியதில் இளைஞரொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்றுமாலை யாழ்நகரில் நிகழ்ந்துள்ளது. பிறவுண் வீதியைச் சேர்ந்த கே. இராஜன் (வயது 16) என்ற இளைஞனே இச் சம்பவத்தில் படுகாயமுற்றவராவர் (மு)

## 35-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
07-04-1914

மறைவு
21-07-1991

அமரர்
தாமோதரம்பிள்ளை
செல்லம்மா

எம்மை தாலாட்டி சீராட்டி, சோறூட்டி வளர்த்தஎங்கள் தெய்வமே நீங்கள் இந்த மண்ணைவிட்டுமறைந்தாலும் எங்கள் இதயத்தைவிட்டு மறையவில்லை. உங்கள் பிரிவால் கண்ணீர் சிந்தும்

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

ம. பாலச்சந்திரன்
238, 7ஆம் குறுக்குத்தெரு,
மணிப்புரி.
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (R-1669)

## நான்கு மாத வேதனமில்லை

(காங்கேசன்துறை)

காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு 4 மாதங்களுக்குரிய வேதனங்கள் வழங்கப்படவில்லை. இதனால் இந்த ஊழியர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றார்கள் என தெரிகிறது.

இந்த ஊழியர்களுக்குரிய வேதனங்களை பெற்றுக் கொடுப்பதற்கு சீமெந்து கூட்டுத்தாபனத்தின்ஆளணிப்பகுதி கொழும்பு தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (56)

## 200ஆம் நாள் நினைவஞ்சலி



### லிங்கவேந்தன்

(பிலிப் றொபின்சன்)

| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 12-01-73 | 05-02-91 |

எல்லை கடந்த எதிரிகளை விரட்ட
வெல்லும் படையில் வீரமுடன் போரிட்டாய்
தச்சன் காட்டருகே ஆவிபிரிய
மிச்சமென நினைவு மட்டும் உள்ளத்தில் தேங்கும்.

இரு நூறு நாட்கள் ஓடி மறைந்தாலும்
வரும் படையை எதிர்க்கும் வலிமை - உன்
கல்லறையிலும் பூக்கும் நீ சுமந்த
இலட்சியங்கள் ஈடேறும்.

(R/ 1672) குருநகர். குடும்பத்தினர்

## 45-ம் நாள் நினைவஞ்சலி

வீர ஜனனம்
25 03-1974



வீர மரணம்
11-07-1991

### தனபாலசிங்கம் சசிலதா (ஜீவா)

மட்டுவில் தெற்கு

தாயக மண் மீட்புக்காக ஆனையிறவில் எதிரிப் படையோடு மோதி 11.07.91 இல் வீரமரணமடைந்த வேங்கை தனபாலசிங்கம் சசிலதா (ஜீவா) அவர்களுக்கும் அவருடன் வீரமரணமெய்திய மற்றைய வேங்கைகளுக்கும் எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

மட்டுவில் தெற்கு (R/1667) மட்டுவில், நுணாவில் சிற்றூரவை மக்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### மருத்துவ மாணவர்களுக்கான ஆங்கிலப் பாடநெறி

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்குப்புதிதாக அனுமதிக்கப்பட்ட மருத்துவ மாணவர்களுக்குரிய கல்வி ஆண்டு 1991 09.30 இல் தொடங்கும். இம் மாணவர்களுக்கான ஆங்கிலப் பாடநெறி 1991.09.02இல் ஆரம்பமாகும். மேற்படி மாணவர்கள் 1991.09 02 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ள தகுதிகாண் பரீட்சைக்கு பின்வரும் ஆவணங்களுடன் தோற்றுதல் வேண்டும்.

(1) தேசிய அடையாள அட்டை
(2) பதிவீட்டு அட்டை

- பதிவாளர்

(B/2989)

## வரிவிளம்பரம்

**மணமக்கள் தேவையா?**

எம்மிடம் மணமக்கள் நிறைய இருக்கிறார்கள் ஞாயிற்றுக்கிழமையில் சந்திக்கலாம் மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (B/1668)

**O/L 90, 91 வாராந்த பயிற்சி மதிப்பீடு**

விஞ்ஞானம், கணிதம், ஆகிய பாடங்களுக்குரிய பகுதி I+II வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும், அதற்கு விடையளித்துத் தரும் பட்சத்தில் இலவசமாக விடையுடன் திருத்திக் கொடுக்கப்படும். BOND புத்தக நிறுவனம். 58A, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (B-2984)

**ஆண்டு - 5 (புலமைப்பரிசில்)**

(மாணவர்களைப் பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமான பயிற்சிப் பரீட்சை) தமிழ், கணிதம் பாடங்களுக்குரிய மாதிரி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும். அவற்றிற்கு விடையளித்துத் தரும் பட்சத்தில் இலவசமாக விடைகளுடன் திருத்திக் கொடுக்கப்படும்) BOND புத்தகநிறுவனம்.58A. ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம். (B-2983)

## நினைவு கூருகின்றோம்...

1991-08-24



### கைலாஷ்

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னாரில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச்சங்க அலுவலகரான தமிழ் பொதுமகன்

1986 ஆம் ஆண்டு இந்தியாவில், பயிற்சி முகாமில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த

பசில் (வேலுப்பிள்ளை அருட்செல்வம்-பருத்தித்துறை)

யாழ். நகர்ப் பகுதியில் தனியார் வங்கி ஒன்றின் முன்னால் சிறிலங்காப் படையினரின் எறிகணை வீழ்ந்து வெடித்ததில் கொல்லப்பட்ட வங்கி முகாமையாளரான கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

1988 ஆம் ஆண்டு உரும்பராயில் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளரான எம். துரைராசா

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவு முகாம் பகுதியில்

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 15 | 11 |
| -- | -- |
| 11 | 07 |

### 45-ம் நாள் நினைவு அஞ்சலியும் அந்திமக் கிரியை அழைப்பிதழும்

### தமிழ்செல்வன் (வாசு)

செல்வன் வே. கேசிங்கம்

வீர ஜனனம்
25 03-1974

வீர மரணம்
11-07-1991

## தனபாலசிங்கம் சசிலதா (ஜீவா)

மட்டுவில் தெற்கு

தாயக மண் மீட்புக்காக ஆனையிறவில் எதிரிப் படையோடு மோதி 11.07.91 இல் வீரமரணமடைந்த வேங்கை தனபாலசிங்கம் சசிலதா (ஜீவா) அவர்களுக்கும் அவருடன் வீரமரணமெய்திய மற்றைய வேங்கைகளுக்கும் எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

மட்டுவில் தெற்கு
(R/1667)

மட்டுவில், நுணாவில்
சிற்றூரவை மக்கள்

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம்
15
--
11
--
1976



வீரமரணம்
11
--
07
--
1991

## வீரவேங்கை சரத்பாபு

(நவரத்தினம் கோபிநாத்) (கோபி)

எப்பிறப்பில் காண்போம் இனி!
உன் ஆருயிர் தந்தையையும் தாயையும்
உடன் பிறப்பையும் மற்றும்
உறவினரையும் தவிக்கவிட்டு எங்கு
சென்றாய் எம் செல்வமே!
வாடித் தவிக்கின்றோம் நாம்
தமிழன்னை விலங்கொடிக்க சென்ற
வீரமறவனே களத்திலே சரத்பாபு
என்ற நாமத்தோடு ஆனையிறவு
மண்ணில் கொடியவருடனே
நேரடி மோதலில் மடிந்தாயோ
உன்பிரிவால் வாடி தவிக்கின்றோம்.
எங்கள் குடும்ப குலக்கொழுந்தே கோபி
எம்மை வானில் இருந்து வாழ்த்துவாய்
கண்மணியே!
எப்பிறப்பில் காண்போம் இனி!

கல்லூரி வீதி,
கொக்குவில்.

உன்பிரிவால் தாங்கொணா துயருறும்
பாசமிகு அப்பா, அம்மா தம்பி,
பேர்த்திமார், பேரன் மற்றும்
உறவினர்கள்.

(B-2991)

பல்கலைக்கழகம்,
இலங்கை

### மருத்துவ மாணவர்களுக்கான ஆங்கிலப் பாடநெறி

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்குப்புதிதாக அனுமதிக்கப்பட்ட மருத்துவ மாணவர்களுக்குரிய கல்வி ஆண்டு 1991 09.30 இல் தொடங்கும். இம் மாணவர்களுக்கான ஆங்கிலப் பாடநெறி 1991.09.02இல் ஆரம்பமாகும். மேற்படி மாணவர்கள் 1991.09 02 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ள தகுதிகாண் பரீட்சைக்கு பின்வரும் ஆவணங்களுடன் தோற்றுதல் வேண்டும்.

(1) தேசிய அடையாள அட்டை
(2) பதிவீட்டு அட்டை

- பதிவாளர்

(B/2989)

திக்கலாம் மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (B/1668)

### O/L 90, 91 வாராந்த பயிற்சி மதிப்பீடு

விஞ்ஞானம், கணிதம், ஆகிய பாடங்களுக்குரிய பகுதி I+II வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும், அதற்கு விடையளித்துத் தரும் பட்சத்தில் இலவசமாக விடையுடன் திருத்திக் கொடுக்கப்படும். BONDபுத்தக நிறுவனம். 58A, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

(B-2984)

### ஆண்டு - 5 (புலமைப்பரிசில்)

(மாணவர்களைப் பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமான பயிற்சிப் பரீட்சை) தமிழ், கணிதம் பாடங்களுக்குரிய மாதிரி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும். அவற்றிற்கு விடையளித்துத் தரும் பட்சத்தில் இலவசமாக விடைகளுடன் திருத்திக் கொடுக்கப்படும்) BOND புத்தகநிறுவனம்.58A. ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.

(B-2983)

## 45-ம் நாள் நினைவு அஞ்சலியும் அந்திமக் கிரியை அழைப்பிதழும்

## தமிழ்செல்வன் (வாசு)

செல்வன் வே. தேசிங்கம்

மண்ணிற்காய்
1970-9-26

மண்மீட்புக்காய்
1991-07 11

திருமலை தந்த தமிழ் செல்வனடா?
தீனர் கொடுமை பொறுக்காமல் சேர்ந்தார்
வீரமுடைய தமிழ்படை
புலிப்படையுடன் போர் முனைக்கு சென்றான்
கோட்டையில் வெற்றி கண்டது போதாது
என்றான்
புறப்பட்டான் மன்னார்
வீரமுடன் போராடி வீணர்களை
வீழ்த்தி வெற்றி கண்டான்
நாட்டுக்கு மட்டுமல்லாது வீட்டுக்கும்
அயலவர்களுக்கும் இவன் நல்ல தமிழ்செல்வன் தான்
மண்மீட்புக்காய் ஆனையிறவிலும் இவன் பணி
தொடர்ந்தது வீரமுடன் போராடி
போர்முனையில் வெற்றியுடன் திரும்புவான்
என நாம் எண்ணியிருந்தோம் ஆனால் மண்மாதா
தன்னோடு சேர்த்துக் கொண்டாள் தமிழ்செல்வனை
மறப்போமா! மறக்குமா நெஞ்சம்
எமது உயிர் மூச்சு உள்ளவரை உம்மை
மறக்க மாட்டோமடா செல்வா
உமது ஆத்மா சாந்தியடைவதாக

மு.கு:
24-8-1991 ல் இல்லத்தில் நடைபெறும்அந்திமக்கிரியைகளில் கலந்து இவரது ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்குமாறு உறவினர் நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய விதானைவளவு
உடுப்பிட்டி

இங்ஙனம்
அப்பா, அம்மா,
பெரியப்பா (மு கந்தையா)
அண்ணன்மார் தம்பி, தங்கைகள்

(R/1656)

## கூருகின்றோம்...

### 1991-08-24



## கைலாஷ்

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னாரில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச்சங்க அலுவலகரான தமிழ் பொதுமகன்

1986 ஆம் ஆண்டு இந்தியாவில், பயிற்சி முகாமில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த

பசில் (வேலுப்பிள்ளை அருட்செல்வம்-பருத்தித்துறை)

யாழ். நகர்ப் பகுதியில் தனியார் வங்கி ஒன்றின் முன்னால் சிறிலங்காப் படையினரின் எறிகணை வீழ்ந்து வெடித்ததில் கொல்லப்பட்ட வங்கி முகாமையாளரான கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

1988 ஆம் ஆண்டு உரும்பராயில் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளரான எம். துரைராசா

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவு முகாம் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

கைலாஷ் (கனகசபாபதி லோகேந்திரன் - 116/3, கச்சேரி ஒழுங்கை, அரியாலை)

மட்டக்களப்பு, மியாங்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்

யாழ்ப்பாணம் / வண்ணார்பண்ணை மேற்கு, ஆனைக்கோட்டைப் பகுதிகளில் சிறிலங்காப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட பெண் உட்பட 2 தமிழர்கள்

நாரந்தனை வடக்குப் பகுதியில் சிறிலங்கா முப்படையினரும் இணைந்து மேற்கொண்ட அகோரத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட 30 தமிழர்கள்

மண்டைதீவில் சிறிலங்காப் படையினரின் அட்டூழியங்களின் போது கொல்லப்பட்ட கணவன், மனைவி, பெண் குழந்தை மற்றும் ஒரு சிறுமி ஆசிரியை

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தாய், தந்தை, குழந்தைகள் ஆகிய ஆறு தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/2992)

ஆசிரியர், கல்வித்திணைக்கள ஊழியர்

# ஊக்குவிப்பு கொடுப்பனவிற்கு மொத்தமாக நிதி இல்லை

(நல்லூர்)

வடக்குக்கிழக்குப் பிரதேசங்களில் உள்ள ஆசிரியர்களுக்கும், கல்வித்திணைக்கள ஊழியர்களுக்கும் ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்கக்கல்வி அமைச்சு நிதி ஒதுக்கீடுசெய்துள்ளது இதற்கான அறிவுறுத்தல் வடகிழக்கு மாகாண கல்விச் செயலாளரினால் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக மாகாண சபைகள், உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சின் 23.3 91 திகதியிடப்பட்ட 7/91சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகள் செய்வதற்கு கல்வி உயர்கல்வி அமைச்சு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது

1.1 88 முதல் 4 7 89 வரையிலான காலப்பகுதிக்கே இந்த ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும். நிரந்தரசேவையிலுள்ளவர்களே இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவுக்கு உரித்தானவர்கள். அமைய மற்றும் தற்காலிக உத்தியோகத்தர்கள் இதற்கு உரித்தானவர்கள் அல்லர்.

மேற்குறிப்பிட்டகாலப்பகுதியில் சேவையில் இருந்து கடமைக்குச் சமுகமளித்தவர்களுக்கு மாத்திரமே இக்கொடுப்பனவுகள்வழங்கப்படவுள்ளன. விடுமுறையில் நின்ற நாட்களுக்கும் (லீவு) பாடசாலைத் தவணை விடுமுறை நாட்களுக்கும் ஊக்குவிப்புப்பணம் வழங்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தமாகஇந்தக்கொடுப்பனவு பணம் வழங்கப்படமாட்டாது. ஒரே தடவையில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்குக் கட்டுநிதி போதியளவைப் பெறுவது கடினமானதனால் எந்தெந்த மாதத்திற்கு எவ்வளவு தேவைப்படும் என்பதையும், ஒட்டுமொத்தமாக எவ்வளவு தேவைப்படும் என்பதையும் 15.9 91க்கு முன் அறியத்தருமாறு கல்வி உயர்கல்விஅமைச்சினால் கோரப்பட்டுள்ளது. திறைசேரி வழங்கும் தொகையைப் பொறுத்து எந்தெந்த மாதத்திற்கு எவ்வளவு தொகையென்பது பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

## தங்கக் கடத்தல் பிடிபட்டது

(கொழும்பு)

சிங்கப்பூரில் இருந்து இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான நான்கு தங்கக் கட்டிகளை வயிற்றின் அடிப்பாகத்தினுள் வைத்து கடத்தி வந்தவர் கொழும்பில்பிடிபட்டார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு அவர் பிடிபட்டதாகவும் இவரைப் பரிசோதித்த சுங்கப்பிரிவினர் சந்தேகங்கொண்டு விசாரித்த போது இவர் மாட்டிக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இசைக்கச்சேரிகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகம், நல்லூர்க்கந்தசுவாமி கோயில் உற்சவத்தை முன்னிட்டு இன்று சனிக்கிழமை 24 ஆம் திகதி முதல் 09.09 91 வரை கம்பன் கோட்ட மண்டபத்தில் தினமும் மாலை 5 45 மணிமுதல் இசைக் கச்சேரிகளை நடாத்தவுள்ளது.

இந்த நிகழ்ச்சிகளில் யாழ் நகரின் முன்னணிக் கலைஞர்கள் பங்கு கொள்ளும் தவில், நாதஸ்வர இன்னிசைகள், சங்கீதக் கச்சேரிகள், வாத்திய இசைகள், கெஞ்சிற் கச்சேரி என்பன இடம்பெறவுள்ளன.


சிந்தனைக்கு

பிறர் இன்பத்திற்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்பவர்களே மேற்பட்ட மக்கள் என்பது மட்டுமல்ல; இன்பத்தைப் பெரிதும் எய்தியவர்கள்.

— பஸ்வீலி - ஸுகோம்லிம் ஷீகி



ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 24-08-1991

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 5208

த. பெ. எண் 03


## தட்டிக் கழிப்பதே தொடரும் தந்திரம்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவென அமைக்கப்படவுள்ள பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு சிறிலங்கா பாராளுமன்ற அங்கத்தவர் மங்கள முனசிங்காவை அதன் தவிசாளராக சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின்ஆலோசனையின் பிரகாரம்அரசாங்கம்நியமித்துள்ளது.

சம்பிரதாய பூர்வமாக பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்கு - அரசாங்கக் கட்சி உறுப்பினர்களே தலைமை தாங்குவது வழக்கமாகும். ஆனால் இம்முறை எதிர்க்கட்சியைச் சேர்ந்தவரும், பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையைக் கொண்டு வந்தவருமான மங்கள முனசிங்கா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மங்கள முனசிங்காவை தெரிவு செய்தமை சிறிலங்கா ஜனாதிபதியின் பெருந்தன்மையைக் காட்டுகின்றது. இது ஒரு சம்பிரதாயத்தை மீறிய செய்கையாக இருப்பினும் இனப்பிரச்சினையின் தீர்வில் சிறிலங்கா ஜனாதிபதி கொண்டுள்ள ஆர்வத்தையே இவை காட்டுகின்றன என அரசாங்க தரப்பினரும், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் குறிப்பிட்டாலும் உண்மையில் இது பிரச்சினையைத் தட்டிக் கழிப்பதற்கும், காலம் கடத்துவதற்கான தந்திரமே ஒழிய வேறொன்றும் இல்லை.

இரண்டு வருட காலத்திற்கு மேலாக இனப்பிரச்சினை தீர்விற்கென ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் நடத்திய சர்வகட்சி மாநாட்டில் எதுவித பயனும் ஏற்படவில்லை. சர்வகட்சி மாநாட்டிற்கு ஒழுங்காகச் சென்று வந்த கொழும்பில் தங்கியுள்ள தமிழ்க்குழு ஒன்றிடம் சர்வகட்சி மாநாட்டிற்கு ஒழுங்காகச் சென்று வருகிறீர்களே முன்னேற்றம் ஏதாவது உண்டா என வினவியபோது நல்ல சாப்பாடு போடுகின்றார்கள். ஆகையினால் ஒழுங்காகப் போய் வருகிறோம் என்றார். இதனைக் கொழும்பில் இருந்து வெளிவரும் பத்திரிகைஒன்று தெரிவித்தது. அதாவது தமிழர் பிரச்சினையைப் பற்றிச் சிந்திக்காதவர்களுக்கு தமிழரின் பெயரால் இரண்டு வருடம் சாப்பாடு போட்டு பிரச்சினையை தனது விருப்பிற்கேற்ப சிறிலங்கா அரசாங்கம் இழுத்தடித்தது.

தற்பொழுது சர்வகட்சி மாநாட்டை மேலும் இழுத்தடிக்க முடியாத நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. மங்கள முனசிங்கா கொண்டுவந்த ஒரு தனிநபர் பிரேரணையை எட்டிப் பற்றிப்பிடித்துக்கொண்டு பிரச்சினையை சிறிலங்கா சுதந்திரக்கட்சி பக்கம் திருப்பிவிடப் பார்க்கின்றது.

இதிலிருந்து இனப்பிரச்சினைத் தீர்வில் சிறிலங்கா

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை கிழக்கைச் சேர்ந்த நவரத்தினபூபதி சின்னத்துரை 48734 0308V பளையைச் சேர்ந்த சின்னக்குட்டி சின்னத்துரை (042890065V) ஆகியோரது அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

சிறிலங்கா அரசிடம்

# பிச்சை போடும்படி கேட்கவில்லை உரிமைகளையே கேட்கிறோம்

-பாலச்சந்திரன்

(வவுனியா)

வவுனியா கிராமப்புறக்கூட்டுறவுச் சங்கக்கிளைகள் மூலம் பொது மக்களுக்கு 56 தடவைகள் நிவாரணப் பொருள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இது வரை பத்துத் தடவைமட்டுமே இப்பொருள் வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை பாரபட்சமுடையது. இதை நாம் கண்டிக்கின்றோம்

இவ்வாறு வவுனியா வெகுஜன ஒன்றியத்தின் தலைவர் திரு. பாலச்சந்திரன் குருக்களூரில் இடம் பெற்ற கண்டனக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போது குறிப்பிட்டார்.

பாதுகாப்பு செலவீனத்துக்காக 2500 கோடி ரூபா பணம் ஒதுக்கப் பட்டுள்ளது. இப்பணம் அப்பாவிப் பொது மக்களை கொன்றொழிப்பதற்குத் தான் பயன்படுத்தப்படுகிறது.

தமிழ் மக்கள் தமது அடிப்படை வாழ்வை இழந்து துயரப்படுகின்ற இந்த வேளையில் அரசு இது சம்பந்தமான மக்களின் கஷ்டத்தைப் போக்க எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

மக்கள் கூட்டாக அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபட வேண்டும், உற்பத்தியை பெருக்குவதன் மூலமே நாம் சுயமாக சீவித்துக் கொள்ள முடியும்.

நாம் சிறிலங்கா அரசிடம் பிச்சை போடும்படி கேட்கவில்லை எமக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகளைத் தான்கேட்கிறோம் என்றார்.

கடந்த 20 ஆம் திகதி ஓமந்தைப் பகுதியிலும் மேற்படி கண்டனப் பொதுக்கூட்டம் இடம் பெற்றது.

தற்காலிக ஆங்கில ஆசிரியர்

## ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய சேவையில் அல்லாத வேறு அரச திணைக்களங்களில் கடமையாற்றி ஒய்வு பெற்ற உத்தியோகத்தர்களும் தற்காலிக ஆங்கில ஆசிரிய நியமனத்துக்காக விண்ணப்பிக்கலாம் என்று யாழ். கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை தற்காலிகமாக நிரப்புவதற்கு ஒய்வு பெற்ற ஆசிரியர்களிடமே முன்னர் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

தற்போது ஏனைய அரச சேவையில் இருந்தும் ஒய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றது. இவ்வாறான உத்தியோகத்தர்கள் தாம் விரும்பும் பாடசாலை அதிபருக்கு விண்ணப்பங்களை அனுப்பும்படிகேட்கப்பட்டிருக்கின்றனர். (க)

## நாகர் கோயிலில் ஏவுகணை தயாரிப்புத் திட்டம்

(சென்னை)

நாகர் கோவிலருகே உள்ள மகேந்திர கிரியில் ஏவுகணைகளை தயாரிக்கும் திட்டமொன்று அமுல்படுத்தப்படுகிறது.

அறுபது கோடி ரூபாய் செலவில் உருவாகும் இத் திட்டம் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தினால் அமுல்படுத்

அரச அலுவலகங்கள் இயங்கிய

சம்பிரதாய பூர்வமாக பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்கு அரசாங்கக் கட்சி உறுப்பினர்களே தலைமை தாங்குவது வழக்கமாகும். ஆனால் இம்முறை எதிர்க் கட்சியைச் சேர்ந்தவரும், பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையைக் கொண்டு வந்தவருமான மங்கள முனசிங்கா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மங்கள முனசிங்காவை தெரிவு செய்தமை சிறிலங்கா ஜனாதிபதியின் பெருந்தன்மையைக் காட்டுகின்றது. இது ஒரு சம்பிரதாயத்தை மீறிய செய்கையாக இருப்பினும் இனப்பிரச்சினையின் தீர்வில் சிறிலங்கா ஜனாதிபதி கொண்டுள்ள ஆர்வத்தையே இவை காட்டுகின்றன என அரசாங்க தரப்பினரும், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வெகுசனத் தொடர்பு சாதனங்கள் குறிப்பிட்டாலும் உண்மையில் இது பிரச்சினையைத் தட்டிக் கழிப்பதற்கும், காலம் கடத்துவதற்கான தந்திரமே ஒழிய வேறொன்றும் இல்லை.

இரண்டு வருட காலத்திற்கு மேலாக இனப்பிரச்சினை தீர்விற்கென ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் நடத்திய சர்வகட்சி மாநாட்டால் எதுவித பயனும் ஏற்படவில்லை. சர்வகட்சி மாநாட்டிற்கு ஒழுங்காகச் சென்று வந்த கொழும்பில் தங்கியுள்ள தமிழ்க்குழு ஒன்றிடம் சர்வகட்சி மாநாட்டிற்கு ஒழுங்காகச் சென்று வருகிறீர்களே முன்னேற்றம் ஏதாவது உண்டா என வினவியபோது நல்ல சாப்பாடு போடுகின்றார்கள். ஆகையினால் ஒழுங்காகப் போய் வருகிறோம் என்றார். இதனைக் கொழும்பில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று தெரிவித்தது. அதாவது தமிழர் பிரச்சினையைப் பற்றிச் சிந்திக்காதவர்களுக்கு தமிழரின் பெயரால் இரண்டு வருடம் சாப்பாடு போட்டு பிரச்சினையை தனது விருப்பிற்கேற்ப சிறிலங்கா அரசாங்கம் இழுத்தடித்தது.

தற்பொழுது சர்வகட்சி மாநாட்டை மேலும் இழுத்தடிக்க முடியாத நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. மங்கள முனசிங்கா கொண்டுவந்த ஒரு தனிநபர் பிரேரணையை எட்டிப் பற்றிப்பிடித்துக்கொண்டு பிரச்சினையை சிறிலங்கா சுதந்திரக்கட்சி பக்கம் திருப்பிவிடப் பார்க்கின்றது.

இதிலிருந்து இனப்பிரச்சினைத் தீர்வில் சிறிலங்கா அரசாங்கம் கொண்டுள்ள அக்கறை புலப்படும். இரண்டு வருடங்களாக சர்வகட்சி மாநாட்டை நடத்திய சகல அதிகாரங்களையும் கொண்ட அரசாங்கத்தால் தீர்வுகாணப்பட முடியாத பிரச்சினையை அதிகாரங்கள் எதுவுமற்ற எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவரின் தலைமையிலுள்ள தெரிவுக்குழுவிடம் ஒப்படைப்பது வேடிக்கையாகவுள்ளது.

இதேபோன்றதே நேற்று முன்தினம் பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கா, பேச்சுவார்த்தைகள் நடத்துவது பற்றி புலிகளே தீர்மானிக்க வேண்டும் என்பதுமாகும். புலிகள் எப்பொழுதும் பேச்சுவார்த்தையையோ யுத்த நிறுத்தத்தையோ எதிர்க்கவில்லை. பேச்சுவார்த்தைக்கு சிறிலங்கா அரசாங்கம் நிபந்தனைகள் போட்டபடியாலேயே யுத்த நிறுத்தமோ பேச்சுவார்த்தையோ ஏற்படவில்லை இந்நிலையில் பேச்சுவார்த்தை பற்றிய தீர்மானத்தை எடுக்க வேண்டியது சிறிலங்காவே புலிகள் எப்பொழுதும் பேச்சுவார்த்தைக்கு அரசாங்கத்தின்மீது நிபந்தனை எதையும் விதிக்கவில்லை ஆனால் சிறிலங்கா அரசாங்கம் தம்மீது நிபந்தனை எதையும் விதிக்கக்கூடாது என்றே கோருகின்றனர். இந்நிலையில் நாட்டில் அமைதி ஏற்பட வேண்டும் என்றால் நிபந்தனைகள் விதித்த சிறிலங்கா அரசாங்கமே அதனைக்கைவிட வேண்டும். நிபந்தனை விதிக்காதவர்கள் எதைக்கைவிடுவது?

அதிகாரம் உள்ளவனே அதை வழங்க முடியும், நிபந்தனை விதித்தவனே அதை விலக்க வேண்டும். அதிகாரத்தைப் பறித்தாலும், நிபந்தனை மீறினாலும் சரி, அல்லது அதிகாரத்திற்கு அடங்கிப் போனாலும் நிபந்தனைக்குப் பணிந்துபோனாலும் சரி சமனான நிலையில் இருந்து இருவர் பேச முடியாது அவ்வாறு பேசுவது பேச்சுவார்த்தை அல்ல.

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை கிழக்கைச் சேர்ந்த நவரத்தினபூபதி சின்னத்துரை 48734 0308V பளையைச் சேர்ந்த சின்னக்குட்டி சின்னத்துரை (042890065V) ஆகியோரது அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

### தற்காலிக ஆங்கில ஆசிரியர்

## ஒய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய சேவையில் அல்லாத வேறு அரச திணைக்களங்களில் கடமையாற்றி ஒய்வு பெற்ற உத்தியோகத்தர்களும் தற்காலிக ஆங்கில ஆசிரிய நியமனத்துக்காக விண்ணப்பிக்கலாம் என்று யாழ். கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை தற்காலிகமாக நிரப்புவதற்கு ஒய்வு பெற்ற ஆசிரியர்களிடமே முன்னர் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

தற்போது ஏனைய அரச சேவையில் இருந்தும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றது. இவ்வாறான உத்தியோகத்தர்கள் தாம் விரும்பும் பாடசாலை அதிபருக்கு விண்ணப்பங்களை அனுப்பும்படிகேட்கப்பட்டிருக்கின்றனர். (க)

### அரச அலுவலகங்கள் இயங்கிய

## சேதமுற்ற தனியார் கட்டடத்திற்கு நட்டஈடு

(யாழ்ப்பாணம்)

தனியார் கட்டடங்களில் அரச அலுவலகங்கள் செயற்பட்டுக்கொண்டிருந்தபோது சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்திருப்பின் அவற்றுக்கு ஒருலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வரை நட்டஈடு வழங்கப்படும் என யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

கடந்த 83 ஆம் ஆண்டின் பின் பலதனியார் கட்டடங்கள் அரசாங்க அலுவலகங்களின் தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டுவருவது தெரிந்ததே இக்காலப் பகுதியில் மேற்படி கட்டடங்கள் சேதமாக்கப்பட்டிருப்பின் அது சம்பந்தமான விபரங்களுடன் குறிப்பிட்ட கட்டட உரிமையாளர்கள் வந்து தம்மைச் சந்திக்குமாறு அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (ச)

## கள்ளச் சாராய ஒழிப்பில் ஜெயலலிதா தீவிரம்

(சென்னை)

தமிழ் நாட்டின் எந்தப் பகுதியிலாவது கள்ளச் சாராயம் காய்ச்சுவது கண்டுபிடிக்கப்பட்டால் அந்தப் பகுதிக் கிராமத்தின் கிராம அதிகாரியும், சப் இன்ஸ்பெக்டரும் தற்காலிக பதவி நீக்கஞ் செய்யப்படுவார்கள் என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா எச்சரித்துள்ளார். தர்மபுரி மாவட்டத்தில் பர்கூர் தொகுதியில் சுமார் 47 கோடி ரூபா பெறுமதியான நலத்திட்டங்களை திறந்து வைத்துப் பேசுகையிலேயே இந்த எச்சரிக்கையை அவர் வெளியிட்டார்.

### சிறிலங்கா அரசிடம்

# பிச்சை போடும்படி கேட்கவில்லை உரிமைகளையே கேட்கிறோம்

(வவுனியா)

வவுனியா கிராமப்புறக்கூட்டுறவுச் சங்கக்கிளைகள் மூலம் பொது மக்களுக்கு 56 தடவைகள் நிவாரணப் பொருள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இது வரை பத்துத் தடவைமட்டுமே இப்பொருள் வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை பாரபட்ச முடையது. இதை நாம் கண்டிக்கின்றோம்

இவ்வாறு வவுனியா வெகுஜன ஒன்றியத்தின் தலைவர் திரு. பாலச்சந்திரன் குருக்களூரில் இடம் பெற்ற கண்டனக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போது குறிப்பிட்டார்.

பாதுகாப்பு செலவீனத்துக்காக 2500 கோடி ரூபா பணம் ஒதுக்கப் பட்டுள்ளது. இப்பணம் அப்பாவிப் பொது மக்களை கொன்றொழிப்பதற்குத் தான் பயன்படுத்தப்படுகிறது.

தமிழ் மக்கள் தமது அடிப்படை வாழ்வை இழந்து துயரப்படுகின்ற இந்த வேளையில் அரசு இது சம்பந்தமான மக்களின் கஷ்டத்தைப் போக்க எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

-பாலச்சந்திரன்

மக்கள் கூட்டாக அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபட வேண்டும், உற்பத்தியை பெருக்குவதன் மூலமே நாம் சுயமாக சீவித்துக் கொள்ள முடியும்.

நாம் சிறிலங்கா அரசிடம் பிச்சை போடும்படி கேட்கவில்லை எமக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகளைத் தான்கேட்கிறோம் என்றார்.

கடந்த 20 ஆம் திகதி ஓமந்தைப் பகுதியிலும் மேற்படி கண்டனப் பொதுக்கூட்டம் இடம் பெற்றது.

...வாத்திய இசைகள், கெஞ்சிற் கச்சேரி என்பன இடம்பெறவுள்ளன.

## நாகர் கோயிலில் ஏவுகணை தயாரிப்புத் திட்டம்

(சென்னை)

நாகர் கோவிலருகே உள்ள மகேந்திர கிரியில் ஏவுகணைகளை தயாரிக்கும் திட்டமொன்று அமுல்படுத்தப்பட விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அறுபது கோடி ரூபாய் செலவில் உருவாகும் இத் திட்டம் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தினால் அமுல்படுத்தப்படவுள்ளது.

### வெகுசனத் தொடர்பு சாதனங்கள்

## அரசாங்க ஊழல்களை குறிப்பிட வேண்டும்

- பிரேமதாசா

(கொழும்பு)

''அரசாங்கத்தின் குறைகளையும், திணைக்களத்தில் நடக்கும் ஊழல்களையும், வீண்விரயங்களையும் பற்றி வெகுசனத் தொடர்பு சாதனங்களான பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஆகியன குறிப்பிட வேண்டும்'' என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

டியத்தலாவையில் இடம் பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பிரேமதாசா வெகுசனத் தொடர்பு சாதனங்கள் உண்மை நிலைமைகளை கூறினால் தான் அரசாங்கமோ திணைக்களங்களோ தமது தவறுகளை திருத்தவும் மக்களுக்கு சேவையாற்றவும் முடியும் என்று தெரிவித்தார்.

## முரல்மீன் குத்தி இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்

கட்டுமரத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது முரல் மீன் குத்தியதால் காயமடைந்த இளைஞர் ஒருவர் தெல்லிப்பளை அரசினர் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வேலணைக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது சாவக்காட்டைச் சேர்ந்த வர்ணகுலசிங்கம் (வயது 13) என்பவரே முரல் மீன் குத்தி காயமடைந்தவராவார் (ச)

# சோவியத் அமைச்சரவை கலைப்பு; வெளியுறவுஅமைச்சர் இராஜினாமா

(மொஸ்கோ)

திடீர்ப் புரட்சி தோல்வியுற்றதைத்தொடர்ந்து ரஷ்ய ஜனாதிபதி கொர்பச்சேவ் தனது அமைச்சரவையைக் கலைத்துள்ளார்.

முன்னாள் உள்துறை அமைச்சர் வாதிர் மக்கத்தின் ரஷ்ய புலனாய்வுத் தாபனமான கே. ஜி. பிக்கும் பொறுப்பதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார். விமானப் படைத் தளபதி ஜெனரல் கொசர்ப்பானிகோவ் பாதுகாப்பு அமைச்சைப்பொறுப்பேற்றுள்ளார். முன்னாள் அமைச்சர்களில் ஒருவரான பர்னிக்கோவ் உள்துறை அமைச்சராக நியமனம் பெற்றுள்ளார்.

அதேவேளை சோவியத் யூனியனில் அதிரடிச் சதிப் புரட்சிக்கு ஆதரவாக இருந்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்ததையடுத்து சோவியத் வெளியுறவு அமைச்சர் அலெக் சாண்டர்பெஸ்மட்னிக் இராஜினாமாச் செய்திருப்பதாக அமெரிக்க தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் சோவியத் பிரதமர் வலன்டீன் பவ்லோவ் பதவி நீக்கம் செய்யப்பட்டதாக அதிபர் கொர்ப்பச்சேவ் அறிவித்துள்ளார். கடினப் போக்குக்கொண்ட பழைமைவாதிகளான கம்யூனிஸ்ட் கட்சியினர் தொடர்ந்தும் கைது செய்யப்பட்டு வருகிறார்கள்.

## தாண்டிக்குளதடைமுகாமில் தினமும் மாறும் அறிவிப்பு

(வவுனியா)

வவுனியாவிற்கு வடக்கே பொதுமக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்துகொண்டு போவதையிட்டு, தாண்டிக்குளம் தடைமுகாம் இராணுவத்தினர் நேரத்திற்கு நேரம் புதிய புதிய அறிவிப்புக்களை அறிவித்துக்கொண்டிருக்கின்றனர்.

முதலில் தாராள அனுமதி வழங்கப்பட்ட பொருள்களில் பல தற்போது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சில பொருள்கள் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

தடை செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்ட சில பொருள்கள் மீதான தடை நீக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளுக்கு நாள் ஒலிபரப்பி மூலம் தாண்டிக்குளம் சோதனைமுகாம் இராணுவத்தால் முரண்படக்கூடிய அறிவிப்புக்கள் விடுக்கப்படுகின்றன. (தி)

## நல்லூர்க் கந்தன் வெளிவீதிவலம்

(கொழும்புத்துறை)

நல்லூர் கந்தசாமி கோயில் ஒன்பதாம் திருவிழாவான நேற்று சுவாமி வெளிவீதி வலம் வந்தது. கடந்தஇரண்டு வருடங்களின்பின் இந்த வருடம் சுவாமி வெளி வீதி வலம் வருவது குறிப்பிடத்தக்கது. (24)

## மட்டு. காணாமல் போனோர் விபரம் திரட்டல் ஆரம்பம்

(மட்டக்களப்பு)

கடந்த கால இராணுவ நடவடிக்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணாமல் போனோரின் விபரம் திரட்டும் பணி 20 ஆம்திகதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் விபரம் கோரி விண்ணப்பப்படிவம் அனுப்பப்பட்டுள்ளது. காணாமல் போனோரின் பெயர், வயது, அரசியல் நடவடிக்கையில் பங்குண்டா, இராணுவம் அல்லது பொலீஸால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டாரா, அதற்கான சாட்சியம் உண்டா என்பனவுடன் இந்த நபர்களுக்கு விடுதலைப் புலிகள் ஜே. வி. பியுடன் தொடர்பு உண்டா என்றும் கேட்கப்பட்டுள்ளது.

## கைப்பையினுள் தங்கம் கடத்திய பெண் கைது

(கொழும்பு)

கைப்பை பட்டத்தினுள் 39 லட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தினை கடத்தி வர முற்பட்ட பெண் கைதானார். சுங்கப் பகுதி களஞ்சியத்தில் இவரது கைப்பையை சோதனையிட்டபோது இந்தபாளங்கள் அகப்பட்டன.

இந்த விடயம் பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்றுஇவர் கூறியதால் சுங்கப் பகுதியால் இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே பெண்ணின் முகவரிக்கு வெளிநாட்டு தபால் பகுதியில் சுங்கப் பகுதியினர் செவ்வாயன்று பரிசோதனை செய்த போது அந்தப் பொதிகளுக்குள் 250 பெண்களுக்கான கடிகாரங்கள் இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டிருந்ததாம்.

## இல. இனப்பிரச்சினை சென்னையில் ஆய்வு

சென்னையில் உள்ள இன ஆய்வுகளுக்கான நிலையம் பல கல்விமான்கள், அரசியல் வாதிகள் ஆகியோருடன் இணைந்து இலங்கை இனப் பிரச்சினை குறித்த ஆய்வு ஒன்று நடாத்த உள்ளது.

இம்மாதம் 27 ஆம் 28 ஆம் திகதிகளில் இந்த ஆய்வு மாநாட்டுக்கு கொழும்பிலிருந்தும் சில அரசியல் தலைவர்கள் சென்று கலந்து கொள்ள இருப்பதாகக் கூறப்படுகிறது,

## அமெரிக்கா கூறியதுபோல் நிதி சென்றடையவில்லை

(வாஷிங்டன்)

புரட்சியை உடனடியாக முறியடிப்பதற்கான ஆதரவு நடவடிக்கையாக சோவியத் யூனியனுக்குப் பொருளாதார உதவியை முடுக்கிவிடுவதாக அமெரிக்க அதிபர் புஷ் கூறியுள்ளார். எனினும் அத்தடைகளை அகற்றியதாகக் கூறிய போதிலும் நிதியுதவிகள் மொஸ்கோவை இன்னமும் சென்றடைந்ததாகத் தெரியவில்லை என்று ராய்ட்டர் செய்தித் தாபனம் கூறுகிறது.

அரசின்கட்டுப்பாட்டிலுள்ள பொருளாதாரம் சந்தைப் பொருளாதாரமாக மாற்றப்படமுன்பு சோவியத் யூனியனுக்குப் பெருமளவு தொகைகளை இப்போது அளிப்பது உற்பத்திக்கு எதிரானதாகவும் வீணானதாகவும் அமையலாம் என புஷ் கருத்து வெளியிட்டுள்ளார். ஆனால் உலகின் ஏழு செல்வந்தநாடுகள் சோவியத் யூனியனுக்கு உதவிகளைக் கூடுதலாக அளிக்கவேண்டுமெனப் பிரான்ஸ் அதிபர் மித்தரோன் வலியுறுத்தியுள்ளார்.

## இந்திய லோக்சபாவில் குழப்பம். கூச்சல்

(டில்லி)

இந்திய லோக்சபாவில் நேற்றுத் தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் உறுப்பினர்களுக்கும் பாரதிய ஜனதாக் கட்சி உறுப்பினர்களுக்கும் கிட்டத்தட்ட கைகலப்பு ஏற்படும் நிலை உருவாகியது,

இராமர் பிறந்த இடம், பாபர் மசூதி பற்றிய தனியார் தீர்மானம் ஒன்றின்மீது ஜனதாதள்உறுப்பினர் சையத் சகவுதீன் பேசுகையில் கூறிய சில கருத்துக்கள் மோதலுக்கு வழிவகுத்தன.

அப்போது சபாநாயகர் இருக்கையில் இருந்த ராம்சிங் இருபது நிமிடங்களுக்குச் சபையை ஒத்திவைத்தார். அப்போதும்கூட இரு தரப்பு உறுப்பினர்களும் காரசாரமாகப் பேசிக்கொண்டனர்.

சையத் சகாவுதீனை அவரது கட்சி உறுப்பினர் ஒருவர் பாதுகாப்பாகச் சபாநாயகர் அறைக்கு அழைத்துச் சென்றார்.

சபை மீண்டும் கூடியபோது மேற்படி உறுப்பினர் ஏதும் ஆட்சேபகரமாகப் பேசியிருந்தால் அதைச் சபைக்குறிப்பிலிருந்து நீக்கும்படி எதிர்க்கட்சித் தலைவர் எல். கே. அத்வானி சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார்.

### பற்றறிகள்

ஆய்வுகளுக்கான ... பற்றறிகள்

எனான டோர்ச் பற்றறிகளை எடுத்துக் செல்லக் கூடாதென அறிவுறுத்தப்பட்டும் பலர் இதனை மீறி வருவதாகவும், இத்தகையோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

### இரு விடுதலைப் புலி

புலிகள் இயக்க உதவியாளரான கத்தப்பொடி சிவராஜா (பிள்ளையாரடி) என்பவரும் வீரமரணமடைத்துள்ளனர்.

இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை காலை 5-30 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொடுவாமடு என்னுமிடத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதல் சம்பவமொன்றில் வீரவேங்கை நிச்சாட் (செல்வகுணசந்திரன் பன்குடிவெளி, இலுப்படிச்சேனை) என்பவரும் புலிகள் இயக்க உதவியாளர்கள் இருவரும் வீரமரணமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## சதிப்புரட்சி நடத்தியோர் தண்டிக்கப்படுவார்கள் - கொர்ப்பசேவ்

(மொஸ்கோ)

அதிரடிப் புரட்சி நடத்திய தலைவர்கள் அனைவரும் தண்டிக்கப்படுவார்கள் என்று அதிபர் கொர்ப்பசேவ் நேற்று சோவியத் நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது குறிப்பிட்டார், அவ்வுரையில் மேலும் அதிரடிப் புரட்சியை ஆதரித்த பெரும் புள்ளிகளின் பெயர்ப் பட்டியலையும் வெளியிட்டார்: நாட்டில் ஜனநாயகத்தை விரும்பும் அனைவரையும் ஒற்றுமை காட்டும்படி வேண்டுகோள் விடுத்த கொர்ப்பசேவ், புதிய நியமனங்கள் பற்றியும் அறிவித்தார்

நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் சீற்றத்தை ஏற்படுத்தக்கூடிய கேள்விகளை எழுப்பியபோது கொர்ப்பசேவ் குழப்பம் மிகுந்தவராக காணப்பட்டார் என்றும் செய்திகள் குறிப்பிட்டன.

## பிராவ்டா மீது தடை

கம்யூனிஸ்ட் கட்சியின் உத்தியோக பூர்வ செய்திப் பத்திரிகையான பிராவ்டா உட்பட ஐந்து பத்திரிகைகளுக்கு ரஷ்யக் குடியரசில் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அவற்றின் சொத்துகள் ரஷ்ய குடியரசு அரசினால் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. உத்தியோக பூர்வ செய்தி நிறுவனமான டாஸ் செய்தி ஸ்தாபனத்தின் தலைவர்பதவி நீக்கம் செய்யப்பட்டிருப்பதாக ரஷ்ய குடியரசின் தலைவர் பொரிஸ் யெல்சின் அறிவித்துள்ளார்.

## பாக். சிந்து மாகாணத்தில் ஆர்ப்பாட்டம்; வன்செயல்

(கராச்சி)

கராச்சியில் கடந்த வாரம் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் திருமதி பூட்டோவின் வாகன அணி தாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் சிந்து மாகாணத்தில் பெரிய அளவில் வன்செயல்கள் இடம்பெற்றுள்ளன.

பாடசாலை மற்றும் பல்கலைகளில் பல இடங்களில் வீதித்தடைகளைப் போட்டனர்.

இதற்கிடையில் சிந்துமாகாணத்தில் மொகாசிகுவாமி இயக்கத்தினருக்கும், மற்ற குழுக்களுக்குமிடையிலே நடைபெறும் மோதல்களும் தணிந்தபாடில்லை.

சிந்து இன மக்களை அவர்களது தாயகத்தில் சிறு பான்

### சிங்கள

புதன்கிழமை கலவரம் மூண்டதும் பயப்பீதியின் காரணமாக சுமார் நானூறுக்கும் அதிகமானோர் நளீமியா பல்கலைக்கழகத்தில் அகதிகளாக

## சுகாதாரப் பயிற்சி திட்டம்

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட சமூக தொண்டர்களுக்கான சுகாதாரப்பயிற்சித்திட்டம் ஒன்றை மாநகர சபை சுகாதாரவைத்திய அதிகார அலுவலகம் நடாத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

## கம்யூனிஸ்ட் கட்சி சட்டவிரோதமானது - லித்வேனியா அறிவிப்பு

(மொஸ்கோ)

சோவியத் கம்யூனிஸ்ட்கட்சி சட்ட விரோதமானது எனப் பிரகடனப் படுத்துமாறு ரஷ்யக் குடியரசின் தலைவர் யெல்சின் விடுத்த கோரிக்

அதே வேளை லித்வேனியக் குடியரசு நாடாளுமன்றம் கம்யூனிஸ்ட் கட்சியை சட்ட விரோதமானது எனப் பிரகடனம் செய்துள்ளது. லித்வேனியாவின் சுதந்திரப் பிர

னையிட்ட போது இந்தியாவின்
கள் அகப்பட்டன.

இந்த விடயம் பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்றுஇவர் கூறியதால் சுங்கப் பகுதியால் அந்தப் பொதிகளுக்குள் 250 பெண்களுக்கான கடிகாரங்கள் இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டிருந்ததாம்.

# இந்திய லோக்சபாவில் குழப்பம். கூச்சல்

(டில்லி)

இந்திய லோக்சபாவில் நேற்றுத் தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் உறுப்பினர்களுக்கும் பாரதிய ஜனதாக் கட்சி உறுப்பினர்களுக்கும் கிட்டத்தட்ட கைகலப்பு ஏற்படும் நிலை உருவாகியது,

இராமர் பிறந்த இடம், பாபர் மசூதி பற்றிய தனியார் தீர்மானம் ஒன்றின்மீது ஜனதாதள்உறுப்பினர் சையத் சகவுதீன் பேசுகையில் கூறிய சில கருத்துக்கள் மோதலுக்கு வழிவகுத்தன.

அப்போது சபாநாயகர் இருக்கையில் இருந்த ராம்சிங் இருபது நிமிடங்களுக்குச் சபையை ஒத்திவைத்தார். அப்போதும்கூட இரு தரப்பு உறுப்பினர்களும் காரசாரமாகப் பேசிக்கொண்டனர்.

சையத் சகாவுதீனை அவரது கட்சி உறுப்பினர் ஒருவர் பாதுகாப்பாகச் சபாநாயகர் அறைக்கு அழைத்துச் சென்றார்.

சபை மீண்டும் கூடியபோது மேற்படி உறுப்பினர் ஏதும் ஆட்சேபகரமாகப் பேசியிருந்தால் அதைச் சபைக்குறிப்பிலிருந்து நீக்கும்படி எதிர்க்கட்சித் தலைவர் எல். கே. அத்வானி சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார்.

# பாக். சிந்து மாகாணத்தில் ஆர்ப்பாட்டம்; வன்செயல்

(கராச்சி)

கராச்சியில் கடந்த வாரம் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் திருமதி பூட்டோவின் வாகன அணி தாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் சிந்து மாகாணத்தில் பெரிய அளவில் வன்செயல்கள் இடம்பெற்றுள்ளன.

பாடசாலை மற்றும் பல்கலைக்கழகக் கல்லூரி மாணவர்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரித்து கராச்சி நெடுஞ்சாலைகளில் பல இடங்களில் வீதித்தடைகளைப் போட்டனர்.

இதற்கிடையில் சிந்துமாகாணத்தில் மொகாசிகுவாமி இயக்கத்தினருக்கும், மற்ற குழுக்களுக்குமிடையிலே நடைபெறும் மோதல்களும் தணிந்தபாடில்லை.

சிந்து இன மக்களை அவர்களது தாயகத்தில் சிறுபான்மையினராக மாற்றிட நவாப் ஷரீவ் அரசு முயல்வதாக குற்றம் சாட்டப்படுகிறது.

பங்களாதேசில் உள்ள பீகாரி முஸ்லிம்களை சிந்து மாகாணத்தில் குடியமர்த்தும் அரசின் திட்டங்களை எதிர்த்தே சிந்து இன மக்கள் போராடி வருகிறார்கள்.

---

அகதி

இந்த இடம்பெயர்ந்த மக்கள் நேற்றையதினமே வாராந்த நிவாரணம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. இம்முகாமில் 25 குடும்பங்கள் தங்கி இருந்தனர். இவர்களுக்கான உடனடி வசதிகளை அரசியல் நிர்வாகப் பிரிவினர் மற்றும் சிற்றூரவையினர்மேற்கொண்டனர்.

---

பண்ணை

மூழ்கி உயிரிழந்துள்ளார். இவரது சடலம் யாழ். மருத்துவ மனையில் ஒப்படைக்கப்பட்டது.

இத்தாக்குதலில் இப்பகுதியில் காணப்பட்ட மூன்று பயணிகள் பஸ், மூன்று கடை, மூன்று பயணிகள் படகு, மற்றும் துவிச்சக்கரவண்டிகள் போன்றவை சேதமடைந்தன. அத்துடன் புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் லொறி ஒன்றும் சேதமடைந்தது. (க) (14)

---

புலிகளைக்

இந்த முதலாவது இரு தரப்பு ஒப்பந்தத்தை உறுதிப்படுத்துவதற்காக இந்தியக் குழுவினர் விரைவில் லண்டனில் பிரித்தானிய அரசு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்துவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பிரித்தானியாவும், இந்தியாவும் தீவிரவாதிகளுக்கு எதிராக இணைந்து செயலாற்ற ஒப்புக்கொண்டுள்ளதாகவும், தீவிரவாத இயக்கங்கள், தனிப்பட்ட தீவிரவாதிகள் ஆகியோர் வங்கிக் கணக்குகளைப் பார்க்கவும், அவர்கள் போதைவஸ்துகள் கடத்தலைத் தடுக்கவும் பிரித்தானியா புதிய சட்டங்களை இயற்றும்என்றும்பிரித்தானிய உயர்ஸ்தானிகர்தெரிவித்தார்

---

## சென்னையில் ஆய்வு

சென்னையில் உள்ள இன ஆய்வுகளுக்கான நிலையம் பல கல்விமான்கள், அரசியல் வாதிகள் ஆகியோருடன் இணைந்து இலங்கை இனப்பிரச்சினை குறித்த ஆய்வு ஒன்று நடாத்த உள்ளது.

இம்மாதம் 27 ஆம் 28 ஆம் திகதிகளில் இந்த ஆய்வு மாநாட்டுக்கு கொழும்பிலிருந்தும் சில அரசியல் தலைவர்கள் சென்று கலந்து கொள்ள இருப்பதாகக் கூறப்படுகிறது,

---

பற்றறிகள்

ளான டோர்ச் பற்றறிகளை எடுத்துக்செல்லக் கூடாதென அறிவுறுத்தப்பட்டும் பலர் இதனை மீறி வருவதாகவும், இத்தகையோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

---

இரு விடுதலைப் புலி

புலிகள் இயக்க உதவியாளரான கத்தப்பொடி சிவராஜா (பிள்ளையாரடி) என்பவரும் வீரமரணமடைந்துள்ளனர்.

இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை காலை 5-30 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொடுவாமடு என்னுமிடத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதல் சம்பவமொன்றில் வீரவேங்கை றிச்சாட் (செல்வகுணசந்திரன் பன்குடிவெளி, இலுப்படிச்சேனை) என்பவரும் புலிகள் இயக்க உதவியாளர்கள் இருவரும் வீரமரணமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

---

சிங்கள

புதன்கிழமை கலவரம் மூண்டதும் பயப்பீதியின் காரணமாக சுமார் நானூறுக்கும் அதிகமானோர் நளீமியா பல்கலைக்கழகத்தில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர் சில சமூகசேவைகள் நிறுவனங்கள் இந்த மக்களுக்கு நிவாரண வசதிகளை செய்து கொடுத்திருப்பதாகவும் சில தகவல்கள் கூறுகின்றன.

22 பேர் கைது

இந்த கலவரத்தின் காரணகர்த்தாக்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இராணுவத்தினர் முப்பத்திரெண்டு நபர்களை கைதுசெய்து விளக்கத்திற்காக வைத்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

'பொலிஸார் காரணம்'

இந்த கலவரம் நடந்தது குறித்து அப்பகுதிக்கு சிறிலங்கா பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் பிரதமருமான டி.பி. விஜயதுங்காவும் மேற்கு மாகாண முதலமைச்சர் சுசில் முனசிங்காவும், பேருவளை பொலிஸ் நிலையத்துக்கு சென்றனர். பின்னர் அகதிகளையும் போய்ப் பார்த்தனர் அச்சமயம் அகதிகள் பொலிசாருக்கெதிரான புகார்கள் கூறியதாகவும் கொழும்பு செய்திகள் கூறுகின்றன. இதனைத் தொடர்ந்து பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும், முதலமைச்சரும் பேருவளை மற்றும் இடங்களில் இராணுவரோந்து பணியை பார்வையிட்டனர்.

---

# சதிப்புரட்சி நடத்தியோர் தண்டிக்கப்படுவார்கள்

## - கொர்ப்பசேவ்

(மொஸ்கோ)

அதிரடிப் புரட்சி நடத்திய தலைவர்கள் அனைவரும் தண்டிக்கப்படுவார்கள் என்று அதிபர் கொர்ப்பசேவ் நேற்று சோவியத் நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது குறிப்பிட்டார், அவ்வுரையில் மேலும் அதிரடிப் புரட்சியை ஆதரித்த பெரும் புள்ளிகளின் பெயர்ப் பட்டியலையும் வெளியிட்டார்: நாட்டில் ஜனநாயகத்தை விரும்பும் அனைவரையும் ஒற்றுமை காட்டும்படி வேண்டுகோள் விடுத்த கொர்ப்பசேவ், புதிய நியமனங்கள் பற்றியும் அறிவித்தார்

நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் சீற்றத்தை ஏற்படுத்தக்கூடிய கேள்விகளை எழுப்பியபோது கொர்ப்பசேவ் குழப்பம் மிகுந்தவராக காணப்பட்டார் என்றும் செய்திகள் குறிப்பிட்டன.

---

முறியடிப்பதற்கான ஆதரவு நடவடிக்கையாக சோவியத் யூனியனுக்குப் பொருளாதார உதவியை முடுக்கிவிடுவதாக அமெரிக்க அதிபர் புஷ் கூறியுள்ளார். எனினும் அத்தடைகளை அகற்றியதாகக் கூறிய போதிலும் நிதியுதவிகள் மொஸ்கோவை இன்னமும் சென்றடைந்ததாகத் தெரியவில்லை என்று ராய்ட்டர் செய்தித் தாபனம் கூறுகிறது.

அரசின்கட்டுப்பாட்டிலுள்ள

---

னுக்குப் பெருமளவு தொகைகளை இப்போது அளிப்பது உற்பத்திக்கு எதிரானதாகவும் வீணானதாகவும் அமையலாம் என புஷ் கருத்து வெளியிட்டுள்ளார். ஆனால் உலகின் ஏழு செல்வந்தநாடுகள் சோவியத் யூனியனுக்கு உதவிகளைக் கூடுதலாக அளிக்கவேண்டுமெனப் பிரான்ஸ் அதிபர் மித்தரோன் வலியுறுத்தியுள்ளார்.

## பிராவ்டா மீது தடை

கம்யூனிஸ்ட் கட்சியின் உத்தியோக பூர்வ செய்திப் பத்திரிகையான பிராவ்டா உட்பட ஐந்து பத்திரிகைகளுக்கு ரஷ்யக் குடியரசில் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அவற்றின் சொத்துகள் ரஷ்ய குடியரசு அரசினால் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. உத்தியோக பூர்வ செய்தி நிறுவனமான டாஸ் செய்தி ஸ்தாபனத்தின் தலைவர்பதவி நீக்கம் செய்யப்பட்டிருப்பதாக ரஷ்ய குடியரசின் தலைவர் பொரிஸ் யெல்சின் அறிவித்துள்ளார்.

---

## சுகாதாரப் பயிற்சி திட்டம்

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட சமூக தொண்டர்களுக்கான சுகாதாரப்பயிற்சித்திட்டம் ஒன்றை மாநகர சபை சுகாதாரவைத்திய அதிகார அலுவலகம் நடாத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் உதவியுடன் இம்மாதம் 27 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை மேற்படி அலுவலகத்தில் இப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெறஉள்ளன இவ்வகுப்புகளில்பங்குபற்றுவதற்குஒவ்வொரு சனசமூக நிலையங்களும் தலா ஒரு பிரதிநிதியை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

---

முல்லைச்

ரில் உணவுப் பொருள்கள் கொண்டு வருவதற்காக இருவரும், பருத்தித்துறை இறங்குதுறைக்கு இருவருமாக நால்வர் அனுப்பப்பட்டுள்ளனர்.

ஊழியர் பற்றாக்குறையை நீக்க அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை என்று முல்லைத்தீவு செயலக வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.(58

---

வவுனியா

படுகிறது.

தற்போது வடபகுதியிலிருந்து பிரயாணிகள் வவுனியா நகரப்பகுதி நோக்கி தினமும் செல்கின்றனர். இவ்வாறு செல்பவர்களில், ஏராளமானவர்கள் சைக்கிள் வியாபாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

---

# கம்யூனிஸ்ட் கட்சி சட்டவிரோதமானது

## - லித்வேனியா அறிவிப்பு

(மொஸ்கோ)

சோவியத் கம்யூனிஸ்ட்கட்சி சட்ட விரோதமானது எனப் பிரகடனப் படுத்துமாறு ரஷ்யக் குடியரசின் தலைவர் யெல்சின் விடுத்த கோரிக்கைக்கு கொர்ப்பசேவ் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மொஸ்கோவிலும், ரஷ்யக் குடியரசுகளிலும் ரஷ்யக் கம்யூனிஸ்ட்கட்சியின் காரியாலயங்கள் மூடப்பட்டுள்ளன.

அதே வேளை லித்வேனியக் குடியரசு நாடாளுமன்றம் கம்யூனிஸ்ட் கட்சியை சட்ட விரோதமானது எனப் பிரகடனம் செய்துள்ளது. லித்வேனியாவின் சுதந்திரப் பிரகடனத்திற்கு எதிராக கம்யூனிஸ்ட் கட்சி செயற்படுவதாக அந் நாடாளுமன்றம் குற்றஞ்சாட்டியுள்ளது.

அத்தோடு கம்யூனிஸ்ட் கட்சியின் சொத்துக்களையும் பறிமுதல் செய்துள்ளது.

---

ஜேர்மன், அவுஸ்திரேலியா, டென்மார்க்

# போல்டிக் குடியரசுகளை அங்கீகரிக்கத் தயார்

சுதந்திரப்பிரகடனம் செய்துள்ள போல்டிக்குடியரசுகளை தனிநாடாக அங்கீகரிக்க தாம் தயாராக இருப்பதாக டென்மார்க், அவுஸ்திரேலியா, ஜேர்மனி நாடுகள் அறிவித்துள்ளன என வெரித்தாஸ் தெரிவித்தது. அதே வேளை இக் குடியரசுகள் தாமதமின்றி சுதந்திரம் பெறும் வகையில் சோவியத் அரசு உடனடிப் பேச்சு வார்த்தையை தொடங்கவேண்டுமென அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் வலியுறுத்தியுள்ளார். ரஷ்யக் குடியரசு ஜனாதிபதி யெல்சினுடன் இணைந்து சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கொர்ப்பசேவை, அதிபர் புஷ் நிர்ப்பந்தப்படுத்துகிறாரெனக் கூறப்படுகிறது'

---

# இஸ்ரேல் நிபந்தனை

(டெல்அவிவ்)

சோவியத் அரசு இஸ்ரேலுடன் முழு அளவிலான உறவை ஏற்படுத்திக் கொள்ளாதவரை மத்திய கிழக்குப் பிராந்திய அமைதி மாநாடு நடத்தப்படுவது பற்றி எந்த முன்னேற்றமும் இருக்க முடியாதென இஸ்ரேலியப் பிரதமர் யிட்சாக் ஷாமிர் கூறியுள்ளார்.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.